சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– தங்களைத் தாங்களே பாரமரித்துக் கொள்ள இயலாத 60% மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியோரின் வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கும் வகையில் வருமான வரம்பை கருத்தில் கொள்ளாமல் எண்ணிக்கை வரையறையின்றி கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் – 2011–2012 ஆம் ஆண்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.13 நாள்:07–02–2012

தை 24, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:-

1. அரசாணை(ப) எண்.160, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்11–09–2006.
2. அரசாணை(நிலை) எண்.154, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்05–09–2007
3. அரசாணை(நிலை) எண்.47 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்22–05–2008.
4. அரசாணை(நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட(சந 6.1)த் துறை, நாள் 17–05–2011.
5. அரசாணை(நிலை) எண்.22, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 24–06–2011.

மீண்டும் படிக்க:-

6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3823/மா.தி.ந.2.1/2011, நாள் 22.12.11.

---

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மிகவும் கடுமையான ஊனத்தால் பாதிக்கப்பட்டு வேறு எந்த வகையிலும் மறுவாழ்வு பெறமுடியாத கடும் ஊனமுற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித் தொகை 01–09–2006 முதல் ரூ.200/– லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியவர்கள் தங்களை தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாது என்னும் அடிப்படையில் 60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியோரின் வாழ்வாதாரத்திற்கு வழி வகுக்கும் வகையில் வருமான வரம்பை கருத்தில் கொள்ளாமல் எண்ணிக்கை வரையறையின்றி கடும் ஊனமுற்றோருக்கு 01–09–2007 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/– பராமரிப்பு உதவித் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவளர்ச்சி குன்றியோருக்கு / கடும் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படுவது போல மாதாந்திர உதவித் தொகையாக ரூ.500/– வீதம் 1000 நபர்களுக்கு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில் தங்களை தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத 60% மற்றும் அதற்குமேல் மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பயனாளிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரி மாவட்ட ஆட்சியரிடருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி, தங்களை தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத 60% மற்றும் அதற்குமேல் மனவளர்ச்சி குன்றியோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும்

திட்டத்தின் கீழ் 9629 நபர்களுக்கு ஜனவரி, 2012 முதல் மார்ச், 2012 வரை மூன்று மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையான மாதமொன்றுக்கு ரூ.1000/– வீதம் வழங்க ரூ.3,03,38,571.75 (பராமரிப்பு உதவித் தொகை ரூ.2,88,87,000/– மற்றும் பணவிடை அஞ்சல் செலவினம் ரூ.14,51,571.75) வழங்க அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து அதன்படி 2011–2012 ஆம் நிதியாண்டில் ஜனவரி 2012 முதல் மார்ச் 2012 வரை 9629 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3,03,38,572/– (மூன்று கோடியே மூன்று இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் 60% மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை**

| | |
|---|---|
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது– CD கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு படிகள்– | |
| 09 உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை<br>(து.தொ.கு.2235–02–101–CD–0938) | ரூ.2,88,87,000/– |
| 05 அலுவலகச் செலவுகள்–04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு<br>(து.தொ.கு.2235–02–101–CD–0545) | ரூ.14,51,572/– |

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.1892/நிதி(சந)/2012, நாள் 25.1.2012ல் பெறப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக).
தலைமை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்து பிரிவுகள்
செயலரின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(சமூக நலம்/வ.செ.பொது–I / II)த் துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.